
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 226 | 4 Pages | 14.3.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 226 | 4 பக்கங்கள் | 14.3.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு**

**விளக்கம்:**
**நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமைஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.**

# சொன்னபடி நடந்து கொண்டாரா பிரதமர் மோடி?
# முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சரமாரி கேள்வி

திருவள்ளூர், மார்ச்.14

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கடந்த 5ம் தேதி நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் லோக்சபா தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழக அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் பா.ஜ.க. அரசின் அநீதியை மக்களிடம் கொண்டு சென்று, அதன் பேராபத்தை எடுத்துக் கூற வேண்டும் என்றும், தொகுதி மறுசீரமைப்பினால் பாதிக்கப்படப் போகும் மாநிலங்களை ஒன்றிணைத்து கூட்டு நடவடிக்கைக் அகுழுவை அமைத்திட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. சார்பில் இன்று மத்திய அரசுக்கு எதிரான கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி தொகுதி மறுசீரமைப்பு, இந்தி திணிப்பைக் கண்டித்து மக்களிடம் எடுத்து கூறும் விதமாக "தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!" எனும் தலைப்பில் மாநிலம் முழுவதும் கண்டன பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும் என தி.மு.க. அறிவித்தது.

இந்நிலையில் மத்திய அரசுக்கு எதிராக திருவள்ளூரில் நடைபெற்று வரும் கண்டன பொதுக்கூட்டத்தில் தமிழக முதல்அமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், "வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும். மத்திய அரசிடம் பணிந்து செல்லும் முதுகெலும்பு அல்லாதவர்கள் அல்ல நாம்.. வாதாடியும், போராடியும் நமது உரிமைகளை நிலைநாட்டுவோம். மத்திய அரசு அனைத்து வகையிலும் நமக்கு தடைக்கல்லை போட்டு வருகிறது.

நம் மொழி, நிலத்தை கெடுக்கின்ற எதிரிகள் எவராக இருப்பினும் துணிவுடன் எதிர்கொள்வோம். இப்படைத் தோற்கின், எப்படை வெல்லும் என்று ஒன்றிய ஆட்சியாளர்களை நோக்கி கேட்கின்ற வகையில் தமிழினம் திரண்டுள்ளது.



ெழிற்கல்வி என்ற பெயரில் குலக் கல்வியை அறிமுகப்படுத்த பார்க்கிறார்கள். NEPயை ஏற்றால் கலைக்கல்லூரி சேர்க்கைக்கும் நுழைவுத் தேர்வு நடத்துவார்கள். முந்தைய 10 ஆண்டுகால ஆட்சியாளர்களால் தமிழ்நாட்டின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டது. வளைந்த முதுகோடு தமிழ்நாட்டின் உரிமைகளை டெல்லியின் காலடியில் அடகு வைத்த அவலம் நடந்தது. ஆனால் இப்போது . திமுக ஆட்சியின் எண்ணற்ற திட்டங்களால் தமிழ்நாட்டை இந்தியாவே திரும்பிப் பார்க்கிறது.

அதிகாரப் பகிர்வுக்கு வழிகாட்டுவதே எனது அணுகுமுறையாக இருக்குமென பிரதமர் மோடி கூறியிருந்தார். மாநிலங்களின் பிரச்னை எனக்குத் தெரியும் என்று பிரதமர் கூறினாரே.. அப்படி நடந்தாரா?. பிரதமர் மோடி தாம் கூறியதுபோல கடந்த 10 ஆண்டுகளில் நடந்து கொண்டிருக்கிறாரா?.

ஒரு மாநில அரசு நாட்டிற்கே எடுத்துக்காட்டாக இருந்தால், அந்த மாநில அரசுக்கு துணை நிற்க வேண்டியது மத்திய அரசின் கடமை. ஆனால், பாஜக அரசு தமிழ்நாடு தலைநிமிர்ந்து நடைபோடுகிறதே என்ற பொறாமையோடு செயல்படுகிறது.

தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் திமுக காவலாக இருக்கிறதே என்ற எரிச்சலோடு உள்ளது. மத்திய அரசு நம்மை சிறுமைப் படுத்தப் பார்க்கிறது. பதவி சுகத்திற்காக மத்தியய அரசிடம் பணிந்து போகும் முதுகெலும்பில்லாத அடிமைக் கூட்டமல்ல நாம்.

தமிழ்நாடு என்ன பிச்சைக்கார மாநிலமா?.. நாங்கள் உழைத்து, வரியை செலுத்திய பணத்தில் இருந்து எங்களுக்கான நிதியை தருவதில் என்ன பிரச்னை? மாணவர்களின் நலனுக்கான நிதியை கொடுக்காமல் இருப்பது நியாயமா?" என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சரமாரி கேள்வி எழுப்பினார்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தெப்போற்சவம்

திருமலை: மார்ச். 14

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் பால்குண மாதத்தில் சுத்த ஏகாதசி அன்று தொடங்கும் தெப்போற்சவம் பால்குண பவுர்ணமி நாளில் முடிவடைகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான தெப்போற்சவம் கடந்த 9ம் தேதி தொடங்கியது.

கோவில் அருகில் உள்ள புண்ணியத்தீர்த்தமான ஸ்ரீவாரி புஷ்கரணியில் மிதக்கும் தெப்பத்தேரில் பகவான் எழுந்தருளி பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தினமும் இரவு 7 மணியில் இருந்து 8 மணி வரை நடைபெற்றது.

முதல் நாளில் ராமபிரான், சீதா தேவி, லட்சுமணர் ஆகியோர் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். 2வது நாளில் கிருஷ்ணர், ருக்மணி தேவி தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

அதன்பின்னர் மூன்றாவது நாளில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத மலையப்பசாமி சிறப்பு அலங்காரத்தில் தெப்பத்தில் தெப்பத்தில் எழுந்தருளி 3 சுற்றுகள் பவனி வந்தார். நான்காவது நாளான நேற்று 5 சுற்றுகள் பவனி வந்தனர். தெப்போற்சவ நிகழ்வுகளில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். திருமலை சின்ன ஜீயர், காவல் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் ஆர்.கே.மீனா, கோவில் துணை செயல் அதிகாரி லோகானந்தன் மற்றும் அதிகாரிகளும் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

தெப்போற்சவத்தின் நிறைவு நாளான இன்று ஸ்ரீதேவி, பூதேவி, மலையப்பசாமி தெப்பத்தில் எழுந்தருளி 7 சுற்றுகள் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

## தொகுதி மறுசீரமைப்பு: தெலங்கானா முதல்மந்திரி ரேவந்த் ரெட்டிக்கு அழைப்பு



புதுடெல்லி, மார்ச்.14

நாடாளுமன்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் வருகிற 22ந் தேதி கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்குமாறு மேற்கு வங்காளம், தெலுங்கானா, கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பஞ்சாப் ஆகிய மாநில முதல்மந்திரிகளுக்கும், ஒடிசா முன்னாள் முதல்மந்திரிக்கும் மற்றும் இந்த 7 மாநிலங்களை சேர்ந்த 29 கட்சி தலைவர்களுக்கும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்து கடிதம் எழுதினார்.

இந்த கடிதத்தை அந்தந்த மாநில முதல்மந்திரிகள், அரசியல் கட்சி தலைவர்களுக்கு நேரில் சென்று வழங்கி அழைப்பு விடுக்க வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அதன்படி தி.மு.க.வில் அமைச்சர்கள், எம்.பி.க்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டு கடிதம் நேரில் சென்று வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், ஒடிசா முன்னாள் முதல்மந்திரி நவீன் பட்நாயக்கை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் நேற்று முன்தினம் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர். இதைத்தொடர்ந்து ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சி தலைவர் பல்லா சீனிவாசராவ், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி ஆகியோரை, தமிழக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, வில்சன் எம்.பி. ஆகியோர் நேற்று சந்தித்து அழைப்பு விடுத்தனர். மேலும் ஆந்திர துணை முதல்மந்திரி பவன் கல்யாணின் சிறப்பு அதிகாரி வெங்கட கிருஷ்ணாவை தி.மு.க. எம்.பி. வில்சன் சந்தித்து கடிதத்தை வழங்கினார்.

இதேபோல் கர்நாடக முதல்மந்திரி சித்தராமையா, துணை முதல் மந்திரி சிவகுமார் ஆகியோரை தமிழக வனத்துறை அமைச்சர் பொன்முடி, அப்துல்லா எம்.பி. ஆகியோர் நேற்று சந்தித்து அழைப்பு விடுத்தனர். மேற்கு வங்காள எம்.பி. டெரிக் ஓ பிரையனை டாக்டர் கனிமொழி சோமு எம்.பி. சந்தித்து கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில், தொகுதி மறுவரையறை குறித்த தென்மாநில அனைத்துக் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்க, தெலங்கானா முதல்மந்திரி ரேவந்த் ரெட்டியை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் எம்.பி.க்கள், கனிமொழி, ஆ.ராசா, என்.ஆர்.இளங்கோ எம்.பி., அருன் நேரு, தங்க தமிழ்ச்செல்வன், ஆகியோர் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர். புதுடெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அதன்பின்னர் முதல்மந்திரி ரேவந்த் ரெட்டி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மத்திய அரசின் தொகுதி மறுவரையறையை ஏற்க முடியாது. தொகுதி மறுவரையறையின் ஆபத்தை உணர்ந்து தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளார். நடக்கப்போவது தொகுதி மறுசீரமைப்பு அல்ல. தென்னிந்தியாவின் தொகுதிகளை குறைக்கும் நடவடிக்கை. தொகுதி மறுசீரமைப்பு கூட்டத்தில் காங்கிரஸ் மேலிடத்தில் அனுமதி பெற்று பங்கேற்பேன். இவ்வாறு அவர் கூறினார்.

## விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் கண்டன பொதுக்கூட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் K. பொன்முடி ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் கண்டன பொதுக்கூட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம், நேமூர் ஊராட்சியில் கழகக் கொடியேற்றி , விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்_பொன்_கௌதமசிகாமணி அவர்கள்தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் சேப்பாக்கம் பிரபாகரன் தாம்பரம் ஜின்னா ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன் மாவட்ட துணை செயலாளர் R.கற்பகம், மாநில மகளிர் பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, ஒன்றிய செயலாளர்கள் வேம்பி ரவி, ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், கல்பட்டு வி.இராஜா, க.மும்மூர்த்தி , ஆ. சா.ஏ.பிரபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், பொதுக் குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, ஒன்றிய குழு தலைவர்கள் சங்கீத அரசி, N.கலைச்செல்வி, ஓம் சிவசக்திவேல், ஒன்றிய குழு துணை தலைவர் ஜீவிதா, மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், மீனா வெங்கடேசன், பேரூர் செயலாளர் நைனா முகம்மது, துணைத் தலைவர்கள் ச.பாலாஜி, வீரராகவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட பொறியாளர் அணி தலைவர் சுரேஷ், இறுதியாக நன்றியுரையாற்றினார்.

## அரசு குடிநீருக்காக அரசமைத்த போர்வெலில் முப்போகம் நெல் விளையும் அதிசயம்



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த சிங்காரப்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட மல்லிப்பட்டி கிராமத்தில் குடிநீருக்காக அமைக்கப்பட்ட போர்வெல்லில் இருந்து நிலத்திற்கு நீர் பாச்சி அறுவடை செய்யும் அவலம் நடைபெற்று வருகிறது குடிநீருக்காக அரசு அமைத்த போர்வெல்லில் இருந்து இடைமறித்து மூன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இணைப்புக் குழாய்களை துண்டித்து நிலங்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர் இதனால் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரின்றி மிகவும் சிரமப்பட்டு வரும் நிலை ஏற்பட்டு வருகிறது இது பற்றி பல முறை சிங்காரப்பேட்டை ஊராட்சி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்கப்படும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை குடிநீர் இணைப்பிலிருந்து திருட்டுத்தனமாக இணைப்புகளை துண்டித்து கிணற்றுக்கும் ஆடு மாடுகளுக்கும் நெற்பயர்களுக்கும் தினசரி நீர் பாச்சி வருகின்றனர் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் குடும்பங்கள் இதைப் பற்றி கேட்டால் மிரட்டல் விடும் போக்கில் பேசி வருகின்றனர் 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் இல்லாமல் விலைக்கு வாங்கி குடிநீர் பயன்படுத்தி வரும் அவலம் ஏற்பட்டுள்ளது எனவே விரைந்து குடிநீர் இணைப்பில் இருக்கும் திருட்டு இணைப்புகளை அப்புறப்படுத்தி கிராமத்தில் உள்ள மக்கள் குடிநீர் பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

## சென்னை மாநகராட்சி மண்டலம் 14 உள்ளகரம், புழுதி வாக்கத்தில் மண்டல குழுக் கூட்டம்





சென்னை. சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 புழுதி வாக்கத்தில், மாதாந்திர மண்டல அலுவல் ஆய்வுக்கூட்டம், பெருநகரசென்னை மாநகராட்சி மண்டலம் 14 ல் உள்ள கூட்டரங்கில், மண்டல குழு தலைவர் பெருங்குடி எஸ். வி. ரவிச்சந்திரன் தலைமையிலும், மண்டல உதவி ஆணையாளர் மற்றும் கல்வி நிலைக் குழு தலைவர் த. விஸ்வநாதன் முன்னிலையிலும் நடைபெற்றது. மாமன்ற உறுப்பினர்கள் ஜே.கே. மணிகண்டன் ,வ. பாபு, கே.பிகே . சதீஷ்குமார் ,பி. சிவப்பிரகாசம், டாக்டர் தமிழரசி சோமு, சமீனா செல்வம், சர்மிளா திவாகர், எல். லட்சுமி ஆகியோர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டுகளில் நடைபெற்று வரும் பணிகள், மேலும் செய்ய வேண்டிய சில பணிகள் பற்றியும் எடுத்துரைத்தனர். மேலும் இக்கூட்டத்தில் மண்டல பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மின்சார வாரியம், காவல்துறை உள்ளிட்ட அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




மதுரையில் தெப்பக்குளம் அருகே தனியார் மண்டபத்தில் சரவணன்,நிர்மலா அவர்களது இல்ல திருமண விழா நடைபெற்றது.இதில் மணமக்கள் தேரி கிஷன், சுவேதா ஆகியோர் திருமணம் பெரியோர்களால் ஆசீர்வதித்து மிக சிறப்பாக நடைபெற்றது.இவர்களது திருமண விழாவிற்கு நண்பர்கள்,சொந்த பந்தங்கள்,உற்றார் உறவினர்கள் அனைவரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதித்தனார்

# திருவண்ணாமலை: 3 சென்ட் இடத்திற்காக மூதாட்டி எரித்துக் கொலை



திருவண்ணாமலை மார்ச்.14

திருவண்ணாமலையில் 3 சென்ட் இடத்திற்காக மூதாட்டி ஒருவரை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தீயில் கருகி உயிருக்கு போராடிக்கொண்டிருந்த மூதாட்டி செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் விருதாம்பாள் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் இந்த கொலை சம்பவத்தில் தொடர்புடைய எல்லப்பன், கோபிகிருஷ்ணன், சுப்ரமணி, விவேக் ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

இதில் மூதாட்டி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்தது எல்லப்பன் என தெரியவந்துள்ளது. மேலும் அவர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கான அனுமதியை புதுப்பிக்க விதிகள் உருவாக்கம்

சென்னை, மார்ச்.14

கொரோனா காலத்தில் நிலுவையில் இருந்த மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கான அனுமதியை புதுப்பிக்க விதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

2024 டிச.31 வரை பெற்ற புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தாமதக் கட்டணமாக ரூ.10 வசூலித்து புதுப்பிக்கலாம். 2024 டிச.31க்கு பிறகான விண்ணப்பங்களுக்கு அவகாசம் முடிந்த நாளில் இருந்து ஒருநாளுக்கு ரூ.500 அபராதம் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகனத்தில் இந்தியில் எழுதியதால் வடமாநிலத்தவர் தாக்கப்பட்டாரா?



சென்னை மார்ச்.14

மும்மொழி கொள்கை விவகாரத்தில் மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் இடையே வார்த்தை போர் நிலவி வருகிறது. இதுதொடர்பான அதிருப்தி தலைநகர் டெல்லி வரை எதிரொலித்தது. இந்த நிலையில், இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்ட வடமாநிலத்தை சேர்ந்த நபர் தனது மகனுடன் தமிழ்நாட்டுக்கு வந்தபோது, அவரது வாகனத்தில் 'பாரத் மாதா கி ஜே' என்று இந்தியில் எழுதி இருந்ததால் தாக்கப்பட்டதாக கூறி ஒருவர் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. வீடியோவில் இடம் பெற்ற நபர் தனக்கு நடந்ததாக கூறும் இந்த சம்பவம் திருப்பதியில் நிகழ்ந்ததாக தெரிவித்து அவரது யூடியூப் பக்கத்திலும் பதிவிட்டு இருக்கிறார். இந்த சம்பவம் நடந்த பிறகு தற்போது சென்னைக்கு வந்திருப்பதாககூறுவதுடன் வீடியோ முடிவடைகிறது. இதை திரித்து தமிழ்நாட்டில் அவர் தாக்கப்பட்டதாக வதந்தி பரப்பி வருகின்றனர் என்று தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது.

# ஆனைவாரி நீர்வீழ்ச்சிக்கு மக்கள் செல்ல தற்காலிக தடை



சேலம், மார்ச்.14

ஆத்தூர் அருகே உள்ள முட்டல் ஆனைவாரி நீர் வீழ்ச்சிக்கு பொதுமக்கள் செல்ல தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக நீர் வீழ்ச்சியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு கருதி பொதுமக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது.

# "இன்றும் பெரியார் வலுவானவராக இருக்கிறாரே... இது போதாதா..?" த.வெ.க. தலைவர் விஜய் பேச்சு



சென்னை, மார்ச்.14

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

பெரியார், தமிழைக் காட்டுமிராண்டி மொழி எனச் சொன்னார் என்பதற்காக நிஜமாகவே மத்திய அரசின் நிதி மந்திரி அவர்களுக்கு வருத்தமா? அப்படி எனில், மும்மொழிக் கொள்கையைத் தமிழ்நாட்டில் திணிக்காமல் இருக்கலாமே?

முரண்களைக் கடந்து எங்கள் கொள்கைத்தலைவரான பெரியாரைத் தமிழ்நாடு இன்றும் ஏன் போற்றுகிறது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன!?

குழந்தைத் திருமணத்தை எதிர்த்ததால், விதவை மறுமணத்தை ஆதரித்ததால், சாதிக் கொடுமைகளை எதிர்த்ததால் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால், இன்றைய நிலையுடன் பொருத்திப் பார்த்துச் சொன்னால், இன்று எல்லோரும் கேட்கும் சமூக நீதிக்கான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நூற்றாண்டுகளுக்கு முன்பே கேட்டவர் என இன்னும் அவரைப் போற்றுவதற்கான பட்டியல் நீண்டுகொண்டே செல்லும்.


மத்திய அரசின் மீதான விமர்சனங்களை மறைப்பதற்குக் கூடப் பெரியார் தொடர்பான சர்ச்சையைக் கிளப்பும் அளவுக்கு வலுவானவராக இன்றும் பெரியார் இருக்கிறாரே... இது போதாதா அவரைத் தமிழ்நாடு ஏன் இன்றும் மாலை மரியாதை செய்து போற்றுகிறது என்பதற்கு?!

பெரியார் போற்றுதும்!

பெரியார் சிந்தனை போற்றுதும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'மலைத்தளம்' என்ற புதிய இணையதளம் தொடக்கம்




சென்னை, மார்ச்.14

தமிழ்நாட்டின் மலைப் பகுதிகளில் உள்ள தனியார் நிலங்களில் மரங்களை வெட்டவும், எடுத்துச் செல்லவும், ஆன்லைன் மூலம் அனுமதி வழங்க 'மலைத்தளம்' என்ற இணையதளம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. இதன்மூலம் மாவட்ட வன அலுவலரிடம் அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட அதிகாரிகள் குழு, இதனை பரிசீலித்து முடிவெடுக்கும்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் 40 வகை ஈரநில பறவைகள்: கணக்கெடுப்பில் தகவல்



ஸ்ரீவில்லிபுத்தூர், மார்ச்.14

விருதுநகர் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கண்மாய், குளங்கள், நீரோடை ஆகியவற்றில் நீர் பறவைகள் கணக்கெடுப்பு நடைபெற்றது. இதனடிப்படையில், ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதிக்கு உட்பட்ட தேர்வு செய்யப்பட்ட கண்மாய், குளங்களில் நீர்ப்பறவைகள் கடந்த 8 மற்றும் 9ம் தேதிகளில் நடைபெற்றது. இதில் ஏராளமான பறவைகள், வண்ணமயமான பறவைகளை கணக்கெடுத்து பார்வையிட்டு பதிவு செய்தனர்.

இது குறித்து இயற்கை ஆர்வலரும், பறவைகள் ஆராய்ச்சியாளருமான நடராஜன் (50) என்பவர் கூறுகையில், 'விருதுநகர் மாவட்டம் முழுவதும் பல்வேறு வகையான நீர்ப்பறவைகள் உள்ளன. இதில், ஸ்ரீவில்லிபுத்தூர் ரேஞ்ச் பகுதியில் 40 வகையான நீர்ப்பறவைகள் உள்ளன. கடந்த காலங்களை விட தற்போது நீர்ப்பறவைகள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது' எனவும் தெரிவித்தார்.

# நாகர்கோவிலில் வீட்டின் மாடியில் தஞ்சம் அடைந்த மிளா: 3 மணிநேரம் போராடி வனத்துறை, தீயணைப்பு துறையினர் பிடித்தனர்



நாகர்கோவில், மார்ச்.14

நாகர்கோவிலில் மிளா வீட்டின் மாடியில் ஏறி நின்றதால், பரபரப்பு ஏற்பட்டது. மாடி வீட்டுக்குள் இருந்தவர்கள் வெளியே வர முடியாமல் கதவை பூட்டி உள்ளே இருந்தனர். வனத்துறை, தீயணைப்பு துறையினர் மிளாவை பிடித்து சிகிச்சை அளித்தனர். நாகர்கோவில் பள்ளிவிளையில் ஒன்றிய அரசுக்கு சொந்தமான குடோன் உள்ளது. இன்று அதிகாலையில் இந்த பகுதியில் மிளா ஒன்று நடமாடியது. அங்கும், இங்கும் ஓடிய மிளா, திடீரென குடோனுக்கு எதிர்புறம் அமைந்துள்ள பால்பண்ணை தெருவுக்குள் நுழைந்தது. அங்கிருந்த ஒரு வீட்டின் மாடியில் ஏறி அப்படியே சிலை போல் நின்றது.

இதனால் மாடி வீட்டுக்குள் இருந்தவர்கள் வெளியே வர முடியாமல் கதவை உள் பக்கமாக பூட்டியவாறு இருந்தனர். பொதுமக்கள் விரட்டியும் மிளா நகரவில்லை. மிளாவின் உடலில் காயங்களும் இருந்தன. உடனடியாக இது குறித்து வனத்துறை மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து காலை 8 மணி அளவில் வனத்துறை மற்றும் தீயணைப்பு துறையினர் வந்து மிளாவை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். வீட்டின் மாடியில் நின்ற மிளா பின்னர் அங்கிருந்து தப்பி தெருவில் இறங்கி ஓடியது. வனத்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் கையில் வலையுடன் அதை விரட்டினர்.

பின்னர் ஒரு வீட்டின் காம்பவுண்ட் சுவர் ஏறி உள்ளே குதித்த மிளாவை வலை விரித்து பிடித்தனர். காலை 11 மணியளவில் மிளா பிடிக்கப்பட்டது. பின்னர் கால்நடை மருத்துவர் வரவழைக்கப்பட்டு, மிளா உடலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து வனத்துறையினர் மிளாவை காட்டுபகுதிக்கு கொண்டு சென்றனர். சமீபத்தில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. சுங்கான்கடை மற்றும் அதை சுற்று வட்டார மலையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக மிளா உள்ளிட்டவை ஊருக்கு வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சுமார் 3 மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3 வாரங்களில் இழப்பீடு: தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவு

சென்னை, மார்ச்.14

வீரப்பன் தேடுதல் வேட்டையின்போது அதிரடிப்படையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய பாக்கி இழப்பீட்டு தொகையை மூன்று வாரங்களில் வழங்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சந்தனக்கடத்தல் வீரப்பன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட தமிழக, கர்நாடக சிறப்பு அதிரடிப்படையினர், விசாரணை என்ற பெயரில் மலை கிராம மக்கள் மீது மனிதஉரிமைமீறல்களில் ஈடுபட்டதாக தேசிய மனித உரிமை ஆணையத்தில் புகார்கள் அளிக்கப்பட்டன. புகார்களை விசாரித்த தேசிய மனித உரிமை ஆணையம், அதிரடிப்படையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 கோடி ரூபாய் இழப்பீடு வழங்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவின்படி, தமிழக அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு கோடியே 20 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கிய நிலையில், பாக்கி தொகை 3 கோடியே 80 லட்சம் ரூபாயை வழங்க தேசிய மனித உரிமை ஆணையம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து தமிழகதலைமை செயலாளர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், பாக்கி தொகையை வழங்க வேண்டும் எனவும், பயனாளிகள் குறித்த விவரங்களை சேலம் மாவட்ட கலெக்டரிடம் வழங்குமாறும் விடியல் மக்கள் நல அறக்கட்டளைக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்தவழக்குநீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர் மற்றும் என்.செந்தில் குமார் அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட கலெக்டர்களிடம் வழங்கியதாக விடியல் அமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அப்போது, அரசு தரப்பில், பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டது குறித்தும், இழப்பீட்டு நிதி ஒதுக்கீடு குறித்தும் அரசு கடிதத்தை தாக்கல் செய்ததுடன், பாக்கி இழப்பீட்டு தொகையை வழங்க மூன்று வாரம் அவகாசம் வழங்க வேண்டும் என்று கோரப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், மூன்று வாரங்களில் பாக்கி இழப்பீட்டை பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிப்படையான முறையில் வழங்கவேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# மணிமுத்தாற்றில் திடீர் வெள்ளம்; திதி கொடுத்தவர்கள் சிக்கி தவிப்பு: போலீசார் மீட்டனர்



கடலூர், மார்ச்.14

மணிமுத்தாற்றில் திதி கொடுத்தவர்கள், திடீரென ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி தவித்தனர். அவர்களை போலீசார் பத்திரமாக மீட்டனர். கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த நல்லூரில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த வில்வ னேஸ்வரர் கோயில் உள்ளது. மணிமுத்தாறு, கோமுகி, மயூரநதி ஆகிய மூன்று நதிகள் கூடும் இடத்தில் இக்கோயில் அமைந்திருப்பது தனிச்சிறப்பு. மாசி மகத்தை முன்னிட்டு, நேற்று நல்லூர் மணிமுத்தாற்றில் சுற்றுவட்டாரகிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் தங்களது முன்னோர்களுக்கு திதி கொடுத்தனர்.

நேற்று முன்தினம் பெய்த மழையால் சுற்றுவட்டார பகுதி ஓடைகளில் இருந்து மணிமுத்தாற்றில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதுகுறித்து அதிகாரிகள் முன்அறிவிப்பு செய்திருந்தும் பலர் ஆற்றில் இறங்கி திதி கொடுத்துள்ளனர். சிறிது நேரத்தில் தண்ணீரின் அளவு மளமளவென அதிகரித்தது. இதனால் திதிகொடுத்துக்கொண்டிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக பலர் அங்கிருந்து வெளியே ஓட்டம் பிடித்தனர். ஆனால் சிலர் வெளியே வரமுடியாமல் வெள்ளத்தில் சிக்கித்தவித்தனர்.

உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேப்பூர் இன்ஸ்பெக்டர் சசிகலா, முதல் நிலை காவலர் தென்எழிலன் ஆகியோர் விரைவாக செயல்பட்டு ஆற்றில் தவித்த பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்றினர். திதி கொடுக்க வந்த மாற்றுத்திறனாளி ஒருவர் ஆற்றின்நடுவேசிக்கி கொண்டார். வெள்ளம் பெருக்கெடுத்து வந்ததால் அவரால் நடந்து கரையை கடக்க முடியவில்லை. தண்ணீரில் சிக்கி கொண்டிருந்த அவரை போலீஸ்காரர் தென்எழிலன் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்த்தார். ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்த போது துரிதமாக செயல்பட்ட போலீசாரை பொதுமக்கள் பாராட்டினர்.

# தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சிகளில் 22ம் தேதி கிராம சபை கூட்டம்: தமிழ்நாடு அரசு உத்தரவு




சென்னை, மார்ச்.14

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் வரும் 22ம் தேதி கிராம சபை கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இது தொடர்பாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பொன்னையா, அனைத்து மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குனர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், ஐக்கிய நாடுகள் சபை 2025ம் ஆண்டுக்கான உலக தண்ணீர் தினத்தினை பனிப்பாறை பாதுகாப்பு என்ற கருப்பொருளில் கொண்டாடபபட உள்ளது.

2030ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதாரம் கிடைத்திட வேண்டும் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதனால் உலக தண்ணீர் தினத்தன்று நடத்தும் கிராம சபை கூட்டத்தில் மழைநீரை சேகரித்தல், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துதல் தொடர்பாக கிராம சபை கூட்டத்தில் விவாதிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பை அகற்றுதல் குறித்தும் விவாதித்து தீர்மானம் நிறைவேற்றி செயல்படுத்த வேண்டும் எனவும் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

மேலும் மழை நீரை சேகரித்தல், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துதல், நிலத்தடி நீரை செறிவூட்டுதல், தண்ணீர் மாசுபாட்டை தடுத்தல், நீர்நிலைகளின் ஆக்கிரமிப்பை அகற்றுதல், நீர்வழித்தடங்களைதூர்வாருதல், குழந்தைகளிடத்தில் நீரின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளைவிவாதித்து தீர்மானம் நிறைவேற்றி செயல்படுத்த வேண்டும். மேலும் கடந்த ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல், நடப்பாண்டு பிப்ரவரி 28ம் தேதி வரைகிராம ஊராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு கிராம சபையில் ஒப்புதல் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழக அரசுக்கு எதிராக பைட் பண்ணுங்கன்னு சீமானை தூண்டி விட்ட அண்ணாமலை: பாஜவின் பி டீம் என்று உறுதியானது.! அரசியல் நோக்கர்கள் கருத்து



சென்னை, மாற்ச்.14

அரசுக்கு எதிராக பைட் பண்ணுங்கன்னு சீமானை அண்ணாமலை தூண்டிவிட்ட வீடியோ தற்போது வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பெரியார் எதிர்ப்பை மூர்க்கமாக முன்னெடுத்து வருகிறார். அவருக்கு பாஜக முழு ஆதரவை தெரிவித்து வருகிறது. அது மட்டுமல்ல, தமிழிசை சவுந்தரராஜன், 'எங்கள் கருத்தியலை தற்போது சகோதரர் சீமான் பேச ஆரம்பித்திருக்கிறார். அவரது பேச்சுகள் எங்களுக்கு பலம் சேர்க்கின்றன. பெரியாரை சீமான் கடுமையாக எதிர்ப்பது பாஜகவுக்கு கிடைத்த வெற்றி. அவர் எங்கள் டீம் என்று சொல்வதை விட எங்கள் கருப்பொருள் கூட்டாளி" என்றும் சொந்தம் கொண்டாடி பேசினார். அதற்கு முன்பே 'அண்ணன் சீமானுக்காக ஆதாரத்தை நான் தருகிறேன்' என அண்ணாமலை ஆஜரானார்.

பாஜ ஆதரவு நிலைபாட்டை சீமான் எடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். நாம் தமிழர் கட்சி சீமானின் பின்னனியில் பாஜக இருப்பதை பல சம்பவங்கள் உறுதி செய்கிறது என்றும் தகவல்கள் வெளியாகின. அதற்கு காரணம், அனைத்து கட்சிகளையும் கண்டபடி பேசும் சீமான், பாஜக தலைவர்களையோ, அக்கட்சியையோ எந்த விதத்திலும் விமர்ச்சிப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் இருந்து வருகிறது. இதனால் நாம் தமிழர் கட்சி, பாஜகவினர் பி டீமாக செயல்படுகிறது என்ற குற்றச்சாட்டுகளும்விவாதப் பொருளாகி வருகிறது.

அதேநேரம், நாம் தமிழர் கட்சியை பாஜகவின் பி டீம் என திமுக மற்றும் கூட்டணி கட்சியினர் தரப்பில் விமர்சித்தால் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்கும் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள், 'சீமான் எங்கள் டீம்' என பாஜக சொல்லும்போது மறுத்து ஒரு வார்த்தைக் கூட சொல்லாமல் மவுனம் காப்பது பல்வேறு சந்தேகங்களை கிளப்புகிறது என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இப்படிபட்ட சூழ்நிலையில், சென்னையில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையும் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானும், நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். சீமான் அமர்ந்திருந்த காருக்கு எதிரே வந்த அண்ணாமலை, அவரின் காரின் அருகே சென்றார்.

தொடர்ந்து காரின் கண்ணாடியை இறக்கிவிட சீமானின் கையைப் பிடித்த அண்ணாமலை, 'அண்ணா பைட் பண்ணிக்கிட்டே இருங்க.. விட்றாதீங்க..ஸ்ட்ராங்கா இருங்க' எனகூறிவிட்டுச் சென்றார். தற்போது இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே பாஜகவின் பி டீமாக சீமான் செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டை உறுதி செய்வது போன்று சீமான் அண்ணாமலையின் சந்திப்பு அமைந்துள்ளதாக சொல்லப்படுகிறது. ஏனென்றால் அண்ணாமலை கூறிய வார்த்தையை கேட்டு காரில் அமர்ந்திருந்த சீமான் தனது விரலை உயர்த்தியது, அதை ஆமோதித்து உறுதி செய்வதாக உள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். சீமான் அண்ணாமலையின் இந்த திடீர் சந்திப்பு தமிழக அரசியல் களத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ்நாட்டில் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியதால் தண்டிக்கப்படுகிறோம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



சென்னை, மார்ச்.14

முதல்வரின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, திமுக சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கலைவாணர் அரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 72 இணையர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் மணமக்களுக்கு பிரிட்ஜ், வாஷிங் மெஷின், எல்.ஈ.டி டிவி, பீரோ, கட்டில், மிக்ஸி, கிரைண்டர், கைக்கடிகாரம் உள்ளிட்ட 50 வகையான சீர்வரிசை பொருட்களை வழங்கினார். அதைத் தொடர்ந்து அவர் பேசியதாவது: 72 இணையர்களுக்கான திருமண விழாவில் உங்கள் முன்னிலையில் இந்த திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். மணமக்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள் உடனே குழந்தையை பெற்றுக் கொள்ளுங்கள்.

நிறைய பெற்றுக் கொள்ள வேண்டாம். ஒன்றிய அரசு ஜனத்தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்று குடும்ப கட்டுப்பாட்டை வலியுறுத்தியது. அதை வெற்றிகரமாக செய்து கொடுத்தது தமிழ்நாடு அரசு. அதனால் நாம் தண்டிக்கப்படுகிறோம். இதற்காக தான் தொகுதி மறுசீரமைப்பு கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7 கோடி பேர். ஆனால், குடும்ப கட்டுப்பாட்டை மக்களிடம் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்தாத மாநிலங்கள் இதனால் பயனடையப் போகிறார்கள். வட மாநிலங்கள் இதனால் 100 தொகுதிகள் வரை பெறப்போகிறார்கள்.

உங்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தை ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அழகான ஒரு தமிழ்ப்பெயரைச் சூட்டுங்கள். இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்ரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, இ.பரந்தாமன், வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், செய்தி தொடர்புக் குழு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா மற்றும்கழகநிர்வாகிகள், மணமக்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

## மக்கள் தொகையின்படி தான் தொகுதி சீரமைப்பு என ஒன்றிய அரசு முடிவெடுத்தால் அதை தமிழ்நாடு எதிர்க்கும்: அமைச்சர் கோவி.செழியன் பேச்சு



சென்னை, மார்ச்.14

சென்னை, மாதவரம் பஜார் ரோட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது: நாட்டின் நலனுக்காக மக்கள் தொகை கட்டுப்பாட்டை முனைப்பாக செயல்படுத்திய ஒரே காரணத்திற்காக, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது. ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை புறக்கணித்தும் வஞ்சித்தும் வருகிறது. தேசியக் கல்வி கொள்கை, மும்மொழி கொள்கை என்ற பெயரில் 3,5 மற்றும் 8ம் வகுப்பிற்கும் மற்றும் இளங்கலை பட்டப்படிப்புக்கே நுழைவு தேர்வு மீண்டும் கொண்டு வர ஒன்றிய அரசு முயற்சி செய்து கல்வியை ஒரு சாரார்க்கு மட்டுமே கொண்டு சேர்க்க முயற்சி செய்கிறது.

பாஜ கட்சியினர் மாணவர்களிடம் மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவு கோரி கையெழுத்து இயக்கம் நடத்தி வருகின்றனர். மாணவர்களிடம் மிட்டாய் கொடுத்து கையெழுத்து வாங்கும் உங்களை பூச்சாண்டிகளாக தான் பார்ப்போம். நாங்கள் கையெழுத்து இயக்கம் நடத்தினால் தாங்க மாட்டீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மக்கள் தொகையின்படி தான் சீரமைப்பு செய்ய முடியும் என மூர்க்கத்தனமாக ஒன்றிய பாஜ அரசு முடிவுக்கு வந்தால், அதனை எதிர்க்க தமிழ்நாடு தீரத்துடன் போராடும். இவ்வாறு அவர் கூறினார்.

## அமைச்சர் மீது சேறு வீசிய பாஜ பிரமுகர் ஜாமீன் மனு: காவல்துறை பதில் தர ஐகோர்ட் உத்தரவு



சென்னை, மார்ச்.14

அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வீசிய விவகாரத்தில் கைது செய்யப்பட்ட பாஜக பிரமுகர் ராமகிருஷ்ணன் ஜாமீன் கோரிய வழக்கில் காவல் துறை பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சேறு வீசியது தொடர்பாக, பாஜ பிரமுகர் ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் மீது திருவெண்ணைநல்லூர் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கில் ஜாமீன் கோரி ராமகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள மனுவில், தன் மீது தவறாக வழக்கு பதியபட்டுள்ளதாகவும், 20நாட்களுக்கும்மேலாக சிறையில் உள்ளதால் ஜாமீன் வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த வழக்கு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனு தொடர்பாக காவல் துறை பதிலளிக்குமாறு உத்தரவிட்டு விசாரணையை மார்ச் 17ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

## தேர்தல் நடைமுறைகளை வலுவாக்கும் யோசனைகளை தெரிவிக்க 18ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டம்: தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்



சென்னை, மார்ச்.14

தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த யோசனைகளை தெரிவிக்கும் வகையில் 18ம் தேதி அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறலாம் என்று தமிழகதலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார். மாநில தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, வாக்காளர் பதிவு அதிகாரி மட்டத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எதுவும் இருந்தால், அது பற்றி வரும் ஏப்ரல் 30ம் தேதிக்குள் கருத்துகளை அளிக்கும்படி அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளை இந்திய தேர்தல் கமிஷன் கேட்டுக் கொண்டுள்ளது. இதுதொடர்பாக அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் கமிஷன் கடிதமும் எழுதியுள்ளது. தேர்தல் செயல்முறைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக கட்சி தலைவர்கள் மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்களுடன், சாதகமான நேரத்தில் கலந்துரையாடலை நடத்தவும் தேர்தல் கமிஷன் திட்டமிட்டுள்ளது.

இந்திய தேர்தல் கமிஷன் கடந்த வாரம் டெல்லியில் நடத்திய கூட்டத்தில், அனைத்து அரசியல் கட்சிகளுடன் மாநில தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, வாக்காளர் பதிவு அதிகாரி அவ்வப்போது கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று என்றும் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் உத்தரவிட்டார். அதுபற்றிய அறிக்கையை சமர்க்கும்படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த நடைமுறையை அரசியல் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதோடு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், வாக்காளர்பதிவு விதிகள், தேர்தல் நடத்தை விதிகள், உச்சநீதிமன்ற உத்தரவுகள், இந்திய தேர்தல் கமிஷனால் அவ்வப்போது வெளியிடப்படும் கையேடுகள் போன்றவை சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கான வெளிப்படையான சட்ட ரீதியான கட்டமைப்பை நிறுவியுள்ளன என்றும் அரசியல் கட்சிகளுக்கு எழுதிய கடிதத்தில் தேர்தல் கமிஷன் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், தேர்தல் நடைமுறைகளை வலுப்படுத்த யோசனைகளை தெரிவிப்பது தொடர்பாக விரைவில் அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அழைப்பு விடுத்துள்ளார். இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சிகளான காங்கிரஸ், சிபிஎம், பாஜக, பகுஜன் சமாஜ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மாநில கட்சிகளான திமுக, அதிமுக உள்ளிட்ட 12 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறும்போது, "அனைத்துக்கட்சி கூட்டம் குறித்து நிறைய கேள்விகள் உள்ளன. 18ம் தேதி தற்காலிகமாக இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆனாலும் அந்த தேதி உறுதிப்படுத்தப்பட்டவுடன் முழுமையாக தெரிவிக்கப்படும்" என்றார்.

## கானா பாடகி இசைவாணிக்கு எதிராக அவதூறு பரப்பிய 3 பேருக்கு நீதிமன்றம் நிபந்தனை ஜாமீன்



சென்னை, மார்ச்.14

ஐயப்ப சுவாமி குறித்து அவதூறு பாடல் பாடிய இசைவாணிக்கு எதிராக அவதூறு பரப்பிய வழக்கில் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஜாமீன் வழங்கி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சுவாமி ஐயப்பனை பற்றியும், ஐயப்பனை வழிபடும் பக்தர்களின் விரதம் குறித்தும், ஐயப்பனின் மகிமை குறித்தும் அவதூறாக பாடல் பாடியதாககானாபாடகி இசைவாணிக்கு எதிரான சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பப்பட்டது. இது தொடர்பாக இசைவாணி அளித்த புகாரின் அடிப்படையில் ரவிச்சந்திரன், ஜோதிநாதன், அழகு பிரகாஷ்பதி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் நீதிபதி கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசு தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் எம்.சுதாகர் ஆஜராகி, ஜாமீன் வழங்க எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார். வழக்கை விசாரித்த நீதிபதி, மனுதாரர்கள் ரவிச்சந்திரன், ஜோதிநாதன், அழகு பிரகாஷ்பதி ஆகியோருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். எதிர்காலத்தில் சாதி ரீதியாகவோ, பெண்களுக்கு எதிராகவோ சமூக வலைதளங்களில் கருத்துக்களை பதிவிட மாட்டேன் என்று உத்தரவாத மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

## பாறை உருண்டு விழுந்ததால் ஊட்டி மலை ரயில் ரத்து



ஊட்டி, மார்ச்.14

நீலகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த தொடர் கனமழை காரணமாக ஹில்குரோவ் ரயில் நிலையம் அருகே மலை ரயில் பாதையில் ராட்சத பாறை உருண்டு விழுந்தது.

இதனால்தண்டவாளம் சேதமடைந்தது.

இந்நிலையில் காலை 7.10 மணிக்கு மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு 184 பயணிகளுடன் புறப்பட்மலை ரயில் கல்லாறு ரயில்வே ஸ்டேஷன் அருகிலேயே நிறுத்தப்பட்டு, மேட்டுப்பாளையம் திரும்பி வந்தது.

## குடந்தை ராமலிங்க சுவாமி கோயிலில் பாதாள அறை கண்டுபிடிப்பு



கும்பகோணம், மார்ச்.14

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே பட்டீஸ்வரத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான சோழர்கள் கால மங்களநாயகி சமேத ராமலிங்கசுவாமி கோயில் உள்ளது. இக்கோயில் ராஜராஜசோழனின் 5வது மனைவியான பஞ்சவன்மாதேவியின் பள்ளிப்படை கோயிலாகும். இக்கோயிலை ரூ.67 லட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பு செய்யும் பணி இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடந்து வருகிறது. இந்நிலையில் இக்கோயிலின் வடக்கு பிரகாரத்தில் நேற்றுமுன்தினம் புதிய கருங்கல் தளம் அமைப்பதற்காக பள்ளம் தோண்டும் பணி நடந்தது.

அப்போது பாதாள அறை ஒன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அந்த அறை முழுக்க முழுக்க கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தது. 8 அடி ஆழம், 15 அடி நீளம் இருந்தது. இந்த பாதாள அறை படையெடுப்புகளின் போது விக்கிரகங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை மறைத்து வைப்பதற்காக உருவாக்கப்பட்டதாக இருக்கலாம். தொல்லியல்துறையினர் ஆய்விற்கு பின்பு, அதில் உள்ள மணல்களை வெளியே எடுத்தால் தான் அறையில் விலை உயர்ந்த பொருட்கள் உள்ளதா என தெரியவரும்.

## காட்டு மாடு தாக்கி வனக்காப்பாளர் பலி



கோவை, மார்ச்.14

கன்னியாகுமரி மாவட்டம் கூவைகாடுமலையை சேர்ந்தவர் அசோக்குமார் (52). இவர் கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தார். கடந்த 10ம் தேதி மாலை தோலம்பாளையத்தில் உள்ள ஒரு விவசாய நிலத்திற்குள் ஒற்றை காட்டு மாடு புகுந்து இருப்பதாக வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது. இதன் பேரில் அங்கு சென்ற அசோக்குமார், பணியாளர்களுடன் இணைந்து அதை விரட்டும் பணியில் ஈடுபட்டார்.

அப்போது சீமை கருவேல புதரில் மறைந்து இருந்த காட்டு மாடு திடீரென அசோக்குமாரை கொம்பால் குத்தியதில் அவரது இடுப்பு பகுதியில் படுகாயம் ஏற்பட்டது. கோவை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி நேற்று காலை அசோக்குமார் உயிரிழந்தார். இவருக்கு மனைவியும், ஒரு மகன், மகளும் உள்ளனர்.

## அமைச்சர் மீது சேற்றை வீசிய பாஜ பெண் நிர்வாகி கைது

விழுப்புரம், மார்ச்.14

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் பெஞ்சல் புயல் மழை வெள்ளத்தால் 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இடத்தை கடந்த டிசம்பர் 3ம்தேதி அமைச்சர் பொன்முடி பார்வையிட சென்றபோதுசிலர்அமைச்சர் உள்ளிட்டவர்கள் மீது சேற்றை அள்ளி வீசினர்.

இதுதொடர்பாக இருவேல்பட்டு கிராமத்தை ராமர் (எ) ராமகிருஷ்ணனை போலீசார் கைது செய்தனர். இந்நிலையில் சேற்றை வீசிய பாஜகவை சேர்ந்த விஜயராணியை போலீசார் கைது செய்தனர்.

தினகனி



# பெரியகுப்பம் கிராமத்தில் கடல் அலையில் சிக்கி மாணவி பலி

புவனகிரி, மார்ச்.14

கடலூர் மாவட்டம் புதுச்சத்திரம் அருகே உள்ளபெரியகுப்பம்கிராமத்தில் உள்ள கடற்கரையில் நேற்று மாசி மக தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுற்று வட்டார கிராமங்களைச் சேர்ந்த கோயில்களில் இருந்து சுவாமிகள்தீர்த்தவாரிக்கு வந்தன.

குறிஞ்சிப்பாடி அருகே அ ம் ப ல வ ா ணன் பேட்டை கிராமத்தை சேர்ந்த ராஜ்குமாரின் மகளான 11ம் வகுப்பு மாணவி பிரின்சியும் (16) உறவினர்களுடன் வந்து கடலில் குளித்துள்ளார்.

அப்போது திடீரென கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார்.

# பாடவாரியான க்யூஎஸ் தரவரிசை உலகின் 50 முன்னணி கல்வி நிறுவனத்தில் சென்னை ஐஐடி

புதுடெல்லி, மார்ச்.14

க்யூஎஸ் நிறுவனத்தின் பாட வாரியான தரவரிசையில் சென்னை ஐஐடி உள்ளிட்ட 9 இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உலகின் முதல் 50 இடங்களில் இடம் பிடித்துள்ளன. லண்டனை சேர்ந்த க்யூஎஸ் நிறுவனம் ஆண்டுதோறும்உலகின்சிறந்தகல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் பாடவாரியான உலக பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியல் தற்போது




வெளியாகி உள்ளது.

இதில், தன்பாத்தில் உள்ள இந்திய சுரங்கவியல் பள்ளி (ஐஎஸ்எம்) பொறியியல் கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் பாடப்பிரிவில் உலக அளவில் 20வது இடத்தை பிடித்துள்ளது. இது இந்திய கல்வி நிறுவனத்தின் இந்தாண்டு சிறந்த செயல்பாடு. சென்னை ஐஐடி பெட்ரோலிய பொறியியல் பாடப்பிரிவிலும், மேம்பாட்டு ஆய்வுகள் பாடத்தில் டெல்லி ஜேஎன்யு கல்லூரியும், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவில் ஐஐடி டெல்லி மற்றும் ஐஐடி மும்பை ஆகிய கல்வி நிறுவனங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த தரவரிசையில் பல்வேறு பிரிவுகளில் மொத்தம் 79 இந்திய பல்கலைக்கழகங்கள் 533 முறை இடம் பெற்றுள்ளன. முந்தைய ஆண்டைவிட 10 பல்கலைக்கழகங்கள் அதிகரித்துள்ள நிலையில், அவைகளின் செயல்பாடும் மேம்பட்டி ரு ப் ப து குறிப்பிடத்தக்கது.

# புதுவையில் இருந்து அரசு பஸ்சில் 7 மதுபாட்டில் கடத்திய டிரைவர், கண்டக்டர்: அதிரடி சஸ்பெண்ட்

திருவண்ணாமலை, மார்ச்.14

புதுச்சேரியில் இருந்து திருவண்ணாமலைக்கு நேற்று முன்தினம் தமிழக அரசு விரைவு பஸ் இயக்கிய டிரைவர் ஏழுமலை மற்றும் கண்டக்டர்நல்லதம்பி இருவரும் பாண்டிச்சேரியில் இருந்து 750 மில்லி லிட்டர் அளவு கொண்ட 7 மது பாட்டில்களை டிரைவர் இருக்கையில் பின் உள்ள பெட்டியிலும், நடத்துனர் பையிலும் மறைத்து கடத்தி வந்துள்ளனர்.

போக்குவரத்து துறை அதிகாரிக்கு வந்த ரகசிய தகவல் அடிப்படையில் செஞ்சி அருகே நட்டார்மங்கலம் வரும் போது அரசு பஸ்சில் ஏறிய பரிசோதகர்கள் சோதனை நடத்தி 7 மதுபாட்டில்களை பறிமுதல் செய்தனர்.



அவற்றை தீ வைத்து எரித்து அழித்தனர். மது பாட்டில்களை கடத்திவந்த டிரைவர் மற்றும் கண்டக்டரை சஸ்பெண்ட் செய்து அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

# தண்டவாளத்தில் தலை வைத்து கள்ளக்காதல் ஜோடி தற்கொலை: தேனி அருகே பரபரப்பு

தேனி, மார்ச்.14

தேனி நகரில் இருந்து மதுரை செல்லும் சாலையில் குன்னூர் கிராமம் உள்ளது. இங்குள்ள வைகை ஆறு ரயில்வே பாலம் அருகே சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஆண், பெண் உடல் சிதைந்த நிலையில் கிடப்பதாக தேனி ரயில்வே எஸ்ஐ இர்வினுக்கு நேற்று காலை தகவல் கிடைத்தது. இதனையடுத்து ரயில்வே போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர். அப்போது ஆண், பெண் உடல்கள் ரயிலில் மோதி பல பாகங்களாக சிதறி கிடந்தன.



போடி – சென்னை விரைவு ரயில் நேற்று முன்தினம் இரவு 8.50 மணியளவில் தேனி ரயில் நிலையத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்னைக்கு புறப்பட்டது. இந்த ரயில் குன்னூர் வைகையாற்று பாலம் அருகே இரவு 9 மணியளவில் சென்றபோது, இருவர் மீதும் மோதி இறந்தது தெரியவந்துள்ளது. இரவு நேரம் என்பதால் யாருக்கும் தெரியவில்லை. நேற்று காலை விவசாய பணிகளுக்கு சென்றோர்பார்த்து தெரிவித்தப் பிறகே ரயில்வே போலீசாருக்கு தகவல் தெரியவந்தது.

இவர்களது உடல்கள் கிடந்த பகுதியில் ஒரு பைக் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் எண்ணை வைத்து போலீசார் விசாரணை நடத்தினர். இதில், இறந்து போனவர் திண்டுக்கல் மாவட்டம், பழநியை சேர்ந்த மணிகண்டன் (35) என தெரியவந்தது. மணிகண்டனுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். இவருக்கு பொள்ளாச்சியை சேர்ந்த சம்யுக்தா என்ற பெண்ணுடன் தகாத உறவு ஏற்பட்டது. இதனால் இருவரது குடும்பத்திலும் பிரச்னை வெடித்தது.

இதன் காரணமாக கடந்த 2 நாட்களுக்கு முன் மணிகண்டனும், சம்யுக்தாவும் வீட்டை விட்டு வெளியேறி பல்வேறு சுற்றுலாத் தலங்களுக்கு சென்றுள்ளனர். பின்னர், குன்னூர் வைகையாற்று பாலம் அருகே ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து தற்கொலை செய்து கொண்டதும் தெரியவந்தது. இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஸ்ரீவைகுண்டம் பள்ளியில் சாதி அடையாளங்கள் அழிப்பு: கலெக்டர் எச்சரிக்கை

ஸ்ரீவைகுண்டம், மார்ச்.14

ஸ்ரீவைகுண்டம் அருகே கடந்த 10ம் தேதி பிளஸ்1 மாணவர் அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவத்தில் 2 சிறுவர்கள் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் எஸ்சி எஸ்டி ஆணையம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளது. மேலும் மாவட்ட கலெக்டர் மற்றும் எஸ்பி, வரும் ஏப்.2ம் தேதிக்குள் பதிலளிக்கவும் உத்தரவிட்டு உள்ளது. இந்நிலையில்ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அரசு உதவி பெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று சமூக நல்லிணக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

அப்போது மாவட்ட கலெக்டர் இளம்பகவத் முன்னிலையில் பள்ளியில் சாதிய உணர்வுகளை தூண்டக்கூடிய வகையில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்த அனைத்து இடங்களையும் முழுமையாக அழித்து தூய்மைப்படுத்தும்பணி நடந்தது. இதையடுத்து கலெக்டர் கூறுகையில், ; 'சமத்துவமற்ற மனநிலையை கல்விக்கூட ங்களுக்கு உள்ளேயும், வெளியேயும் மாணவர்கள் மனதில் விதைக்கக்கூடாது. சாதிய உணர்வுகளை விதைக்கூடிய நபர்கள்



யாராக இருந்தாலும் நடவடிக்கை கடுமையாக இருக்கும் என்பதை மாணவர்களிடம் எடுத்து கூறியுள்ளோம். இதுதொடர்பான தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை அனைத்து அரசு, அரசு உதவிபெறும், தனியார் பள்ளிகளிலும் நடத்த திட்டமிட்டு உள்ளோம்' என்றார். பின்னர் மாணவர்களிடையே நிலவும் சமத்துவமற்ற மனநிலையை மாற்ற சமூகநீதி உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட எஸ்பி ஆல்பர்ட் ஜான், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் கணேசமூர்த்தி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# "பரமசிவன் பாத்திமா" டிரெய்லரை சீமானுடன் இணைந்து வெளியிடும் அண்ணாமலை

தமிழ் சினிமாவில் குறிப்பிடத்தக்க நடிகர்களில் ஒருவர் விமல். இவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான 'விலங்கு' வெப் தொடர் மற்றும் 'சார்' என்ற திரைபடமும் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றன. இவர் தற்போது லட்சுமி கிரியேஷன்ஸ் சார்பில் தனது 34வது படமான 'பரமசிவன் பாத்திமா' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தை 'தமிழ்க்குடிமகன்' என்ற திரைப்படத்தை இயக்கி பாராட்டுக்களை பெற்ற இசக்கி கார்வண்ணன்இயக்கியுள்ளார். இப்படத்தில்விமல்கதாநாயகனாகநடிக்கஅவருடன்இணைந்துகதாநாயகியாக சாயாதேவி நடித்துள்ளார். மேலும் இப்படத்தில் எம்.எஸ்.பாஸ்கர், மனோஜ் குமார், ஸ்ரீ ரஞ்சனி, ஆதிரா, அருள்தாஸ், கூல் சுரேஷ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்த படம் காதலுக்கு மதங்கள் எவ்வாறு தடையாக நிற்கின்றன என்பது குறித்து பேசும் வகையில் உருவாகி வருகிறது. இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் இப்படத்தின் டிரெய்லர் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. 'பரமசிவன் பாத்திமா' படத்தின் டிரெய்லரை நா.த.க ஒருங்கிணைப்பாளர் சீமானும், தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலையும் இணைந்து நாளை மாலை 4 மணிக்கு வெளியிட உள்ளதாக இயக்குனர் இசக்கி கார்வண்ணன் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# திருமணத்தில் நடனமாடி அசத்திய நடிகை சாய் பல்லவி.. வைரலாகும் வீடியோ



பிரேமம் படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் சாய் பல்லவி. அல்போன்ஸ் புத்திரன் இயக்கிய இப்படம் ஹிட்டானது. தமிழகத்தில் இந்தப் படம் 200 நாட்களுக்கு மேல் ஓடி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இதில் சாய் பல்லவி நடித்த 'மலர் டீச்சர்' கதாபாத்திரம் ஏராளமான ரசிகர்களை கவர்ந்தது. முதல் படத்திலேயே சாய் பல்லவிக்கு சிறந்த நடிகை என்று பெயர் கிடைத்ததை தொடர்ந்து தமிழ் படத்தில் நடிக்க வாய்ப்புகள் கிடைத்தன. நடிகை சாய் பல்லவி நடிப்பில் இறுதியாக வெளியான அமரன், தண்டேல் ஆகியஇருபடங்களும்வெற்றிபெற்றதால்தென்னிந்திய சினிமாவின் உச்ச நட்சத்திர நடிகையாக சாய் பல்லவி மாறியுள்ளார். தற்போது, இந்தியில் பிரம்மாண்டமாக உருவாகும் ராமாயணம் படத்தில் சீதா கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். மேலும், பல முன்னணி இயக்குநர்களும் சாய் பல்லவிக்கு கதை கூறி வருகின்றனர்.

இந்நிலையில்ஊட்டிகோத்தகிரியில்நடைபெற்றதன்உறவினர்திருமணத்தில்குடும்பத்துடன்கலந்துகொண்ட சாய் பல்லவி, அங்கு உறவினர்களுடன் படுகர் நடனமாடி மகிழ்ந்தார். .நீலநிற சேலையில் சாய் பல்லவி நடனமாடிய அந்த வீடியோவை பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

# "விடுதலை" படத்திலிருந்து நீக்கப்பட்ட காட்சி வெளியீடு

இயக்குனர் வெற்றிமாறன் பொல்லாதவன், விசாரணை, ஆடுகளம், அசுரன், வடசென்னை போன்ற பல வெற்றி படங்களை இயக்கியதன் மூலம் ரசிகர்கள் மனதில் நிலையான இடம் பிடித்தார்.

இவரது இயக்கத்தில் கடந்த 2023ம் ஆண்டு வெளியான திரைப்படம் தான் 'விடுதலை'. இந்தபடத்தில்நடிகர்சூரிகதாநாயகனாகநடிக்கஅவருடன்இணைந்துவிஜய்சேதுபதி முக்கியகதாபாத்திரத்தில் நடித்திருந்தார். மேலும் இவர்களுடன் இணைந்து பவானி ஸ்ரீ,கவுதம் வாசுதேவ் மேனன், சேத்தன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இந்த படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்திருந்தார்.

இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று பல்வேறு தரப்பினர் இடையே பாராட்டுகளையும் பெற்றது.

'விடுதலை' படம் 53வது சர்வதேச ரோட்டர்டாம் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இயக்குநர் வெற்றிமாறன்இயக்கத்தில்நடிகர்சூரிநடித்த 'விடுதலை', 'விடுதலை 2' படங்கள்திரையரங்குகளில்வெளியாகி கவனம் பெற்றன. கிட்டத்தட்ட 260 நாள்கள் படப்பிடிப்பு செய்யப்பட்ட படமென்பதால் பல காட்சிகள் படங்களில் இடம்பெறவில்லை. இளையராஜா இசையமைத்துள்ள இந்த படத்தை ஆர்.எஸ் இன்போடெயின்மென்ட் சார்பில் எல்ரெட் குமார் தயாரித்துள்ளார்.

இந்தநிலையில், 'விடுதலை' முதல்பாகத்தில்நீக்கப்பட்டகாட்சிகளைதயாரிப்புநிறுவனம்வெளியிட்டுள்ளது.

# சாம்பியன்ஸ் டிராபி குறித்த கேள்விக்கு தோனி கொடுத்த ரியாக்ஷன்.. ரசிகர்கள் விமர்சனம்



9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் துபாயில் அரங்கேறிய இறுதிப்போட்டியில் முன்னாள் சாம்பியன்களான இந்தியா நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 251 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக டேரில் மிட்செல் 63 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் குல்தீப் யாதவ், வருண் சக்ரவர்த்தி தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

பின்னர் 252 ரன்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி 49 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 254 ரன்கள் சேர்த்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கோப்பையை சொந்தமாக்கியது. அதிகபட்சமாக கேப்டன் ரோகித் சர்மா 76 ரன்கள் அடித்தார். அவரே ஆட்டநாயகனாவும் தேர்வு செய்யப்பட்டார்.

மேலும் கங்குலி, தோனிக்கு பிறகு சாம்பியன்ஸ் டிராபி கோப்பையை வென்ற இந்திய கேப்டனாக சாதனை படைத்தார். அத்துடன் டி20 உலகக்கோப்பை மற்றும் சாம்பியன்ஸ் டிராபி ஆகிய ஐ.சி.சி. கோப்பைகளை வென்ற ஒரே கேப்டன் என்ற தோனியின் மகத்தான சாதனையை அவர் சமன் செய்தார்.

இந்நிலையில் ரிஷப் பண்டின் சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்வதாற்காக டேராடூன் சென்ற தோனியை விமான நிலையத்தில் வைத்து சூழ்ந்து கொண்ட பத்திரிகையாளர்கள் சாம்பியன்ஸ் டிராபி குறித்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளிக்க மறுத்த தோனி, போ.. போ.. என்ற வகையில் கையசைத்து விட்டு சென்றார். இதன் காரணமாக மகேந்திரசிங் தோனியை ரசிகர்கள் விமர்சித்து வருகின்றனர்.

# மகளிர் பிரீமியர் லீக் வெளியேற்றுதல் சுற்று: மும்பைக்கு எதிராக டாஸ் வென்ற குஜராத் பந்துவீச்சு தேர்வு





3வது மகளிர் பிரிமீயர் லீக் (டபிள்யூ.பி.எல்.) தொடர் கடந்த மாதம் 14ந் தேதி வதோதராவில் தொடங்கியது. இதைத்தொடர்ந்து பெங்களூரு, லக்னோ, மும்பை ஆகிய இடங்களில் லீக் சுற்று நடந்தது.

லீக் சுற்று முடிவில் டெல்லி கேப்பிடல்ஸ் (5 வெற்றி, 3 தோல்வி, 10 புள்ளி) முதலிடம் பிடித்து தொடர்ந்து 3வது முறையாக இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது. மும்பை இந்தியன்ஸ்(10புள்ளி)ரன்ரேட்அடிப்படையில்பின்தங்கியதால் 2வது இடமும், குஜராத் ஜெயன்ட்ஸ் (8 புள்ளி) 3வது இடமும் பிடித்து பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெற்றன. நடப்பு சாம்பியன் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் (6 புள்ளி), உ.பி.வாரியர்ஸ் (6 புள்ளி) முறையே 4வது, 5வது இடத்துக்கு தள்ளப்பட்டு வெளியேறின.

இதில் மும்பையில் உள்ள பிராபோர்ன் ஸ்டேடியத்தில் இன்று நடைபெறும் வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் குஜராத் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்நிலையில் இந்த ஆட்டத்திற்கான டாஸ் சுண்டப்பட்டது. அதில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் ஆஷ்லே கார்ட்னர் பந்துவீச்சை தேர்வு செய்துள்ளார். அதன்படி மும்பை முதலில் பேட்டிங் செய்ய உள்ளது.

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை தவற விடும் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்.. வெளியான தகவல்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மார்க் வுட் காயம் காரணமாக 4 மாதங்கள் எந்த விதபோட்டிகளிலும்பங்கேற்கமுடியாதசூழல்ஏற்பட்டுள்ளது. அண்மையில் முடிவடைந்த சாம்பியன்ஸ் டிராபி தொடரின்போது மூட்டு பகுதியில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

இந்த காயத்திலிருந்து முழுமையாக மீண்டு வர சுமார் 4 மாத காலம் ஆகும் என கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக சொந்த மண்ணில்இந்தியாவுக்குஎதிராகநடைபெறஉள்ள5போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தியா இங்கிலாந்து இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஜூன் 20ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 4ம் தேதியுடன் நிறைவடைய உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.